# <u>In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.79/2024 தேதி- 18.03.2026
(DW.1) – ரெஞ்சித்

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>**

1.நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வணிகம் செய்து வருகிறேன். எனக்கும் வாதிக்கும் என்ன உறவு முறை என்றால் உறவு முறை ஏதும் இல்லை. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. அசல் வழக்கு எண்.39/2015 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் இதே வழக்கு பட்டிகை சொத்தை பொறுத்து 23.02.2016 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியாது.

2. மேற்சொன்ன தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கப்பட்ட நாளில் இருந்து வழக்கு பட்டிகை சொத்தை வாதி அவர்கள் கைவசம் வைத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. (**நீதிமன்ற கேள்வி** - வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் மற்றும் மொத்த வீஸ்திரணம் என்ன என்றால் சர்வே எண்.5/1, பொன்மனை, 15 சென்ட் சொத்தாகும்), தற்போது வழக்கு பட்டிகை சொத்தை யார் கைவசம் வைத்திருக்கிறார்கள் என்றால் ராபர்ட் ஞானதாஸ் என்பவர் கைவசம் வைத்துள்ளார்.

3.நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் 30.11.2015 ஆம் தேதியில் வழக்கு பட்டிகை சொத்தை நான் விலைக்கு வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில், அந்த தேதியில் அசல் வழக்கு எண்.39/2015 என்ற வழக்கு நிலுவையில் இருந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதே சமயத்தில் திருவட்டார் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2502/2015 என்ற விலை ஆவணம் என் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால்

சரியல்ல. பொய்யான சங்கதிகளை கொண்டு நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).